
37 வது பயணம்
வரலாற்றுடன் ஒரு நீர்காணல்
பொருநை
ஜூலை - 4 & 5 - 2026
www.aatrupadai.com

# Day 01

## கிருஷ்ணாபுரம்

இந்தக் கோவில் 16-ஆம் நூற்றாண்டில் மதுரை நாயக்க அரசின் நிறுவனர் விசுவநாத நாயக்கர் அவர்களின் மகனான கிருஷ்ணப்ப நாயக்கர் அவர்களால் கட்டப்பட்டது. இக்கோவிலிலுள்ள வீரப்ப நாயக்கர் மண்டபத்தில் யாளி, குறத்தி, வீரன், அரசகுமாரி போன்ற உயிரோட்டமான சிற்பங்கள் தமிழ்நாட்டின் தலைசிறந்த நாயக்கர் காலக் கலைப்படைப்புகளாக கருதப்படுகின்றன.

## தேரிக்காடு

திருச்செந்தூர், காயாமொழி, நாசரேத், உள்ளிட்ட பகுதிகளில் பரவியுள்ள செம்மண் மணற்குன்றுகளின் பிரதேசம் தேரிக்காடு எனப்படுகிறது. "தேரி" என்றால் செம்மண் மணற்குன்று என்று பொருள். இந்த மணற்குன்றுகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு கடல் படிவங்கள் மற்றும் காற்றின் செயல்பாடுகளால் உருவானவை என்று புவியியல் ஆய்வுகள் கூறுகின்றன. இந்த செம்மண் நிறம் இரும்புச்சத்து (Iron Oxide), கார்னெட் போன்ற கனிமங்களால் ஏற்பட்டது. சங்ககாலத்தில் இது பாலை நிலத்தின் தோற்றத்தை நினைவூட்டும் பகுதியாக இருந்திருக்கலாம் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.




## கற்குவேல் ஐயனார்

தென் தமிழகத்தின் மிகவும் புகழ்பெற்ற ஐயனார் தலங்களில் ஒன்றாகும். இது தேரிக்காடு பகுதிக்கு அருகில் அமைந்துள்ளது.
கற்குவேல் ஐயனார் தேரிக்காடு சுற்றியுள்ள கிராமங்களின் காவல் தெய்வமாக வணங்கப்படுகிறார்.

## தென்திருப்பேரை

நம்மாழ்வார் அவர்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட 108 திவ்யதேசங்களில் ஒரு வைணவத் தலமாகும்.புகழ்பெற்ற நவதிருப்பதிகளில் ஒன்றாகவும் விளங்குகிறது.



## ஆழ்வார் திருநகரி

திவ்யப் பிரபந்தம் எனும் தமிழ் வேதத்தை உலகுக்கு அளித்த நம்மாழ்வார் பிறந்த ஊர். ஆழ்வார்திருநகரி. இவ்வூரின் பழைய பெயர் திருக்குருகூர். இது 108 திவ்யதேசங்களில் ஒன்றாகும்; தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள நவதிருப்பதிகளின் மையத் தலமாகக் கருதப்படுகிறது.

## சிவகளை

தமிழக அரசின் அகழாய்வுகளில் இங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்கள், தென் தமிழகம் மிகவும் தொன்மையான நாகரிக வளர்ச்சியைக் கொண்டிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. சிவகளையில் கண்டுபிடிக்கப்பட்ட கருகிய நெல் மணிகள் (rice grains) அறிவியல் ஆய்வுகளில் சுமார் 3,000–3,200 ஆண்டுகள் பழமையானவை என மதிப்பிடப்பட்டன. இது தமிழகத்தில் தொன்மையான நெல் சாகுபடிக்கான முக்கிய சான்றாக கருதப்படுகிறது. முதுமக்கள் தாழிகள் (Burial Urns), இரும்புப் பொருட்கள், மண்பாண்டங்கள் மற்றும் வாழ்வியல் சான்றுகள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை ஆகிய மூன்று தளங்களும் இணைந்து பொருநை நாகரிகத்தின் தொடர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. தமிழர்கள் சங்ககாலத்திற்கு முன்பே மேம்பட்ட விவசாய அறிவும், இரும்புத் தொழில்நுட்பமும் கொண்டிருந்தனர் என்பதை சிவகளை காட்டுகிறது.



# Day 02

## பொருநை அருங்காட்சியகம்

"பொருநை" என்பது சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தாமிரபரணி ஆற்றின் பழமையான பெயர். Adichanallur Archaeological Site, Sivakalai Archaeological Site மற்றும் Korkai Archaeological Site ஆகிய அகழாய்வுத் தளங்களில் கிடைத்த தொல்பொருட்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. முதுமக்கள் தாழிகள், இரும்பு ஆயுதங்கள், மண்பாண்டங்கள், வெண்கலப் பொருட்கள், பழங்கால வாழ்க்கை முறையை விளக்கும் மாதிரிகள் ஆகியவை முக்கிய காட்சிப் பொருட்களாக உள்ளன. தமிழர்களின் இரும்புக்காலம், விவசாயம், கடல் வணிகம், அடக்க முறைகள் மற்றும் நகரமயமான வாழ்வியல் குறித்து அறிய உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது

## மானூர்

இக்கோவிலிலுள்ள கல்வெட்டு கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிய மன்னன் மாறன் சடையன் (பராந்தக நெடுஞ்சடையன்) ஆட்சிக்காலத்தைச் சார்ந்தது. கிராம சபை (மகாசபை) உறுப்பினர்களுக்கான தகுதிகள், நிர்வாக விதிமுறைகள் மற்றும் உள்ளாட்சி நடைமுறைகள் குறித்து விரிவாகக் கூறுகிறது. சோழர்களின் உத்திரமேரூர் கல்வெட்டுக்கு முன்பே பாண்டிய நாட்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட கிராம நிர்வாகம் இருந்ததை இது நிரூபிக்கிறது. சபையில் உறுப்பினராக இருக்க கல்வி, வேத அறிவு, நன்னடத்தை போன்ற தகுதிகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.தமிழகத்தில் மக்களாட்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாக வரலாற்றை அறிய மிக முக்கியமான ஆதாரங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.



## மறுகால்தலை தமிழி

திருநெல்வேலி அருகிலுள்ள மறுகால்தலை மலைக்குகையில் இந்த கல்வெட்டு காணப்படுகிறது. 1906-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இந்த கல்வெட்டு, தமிழி எழுத்துகளை அடையாளம் காணும் ஆய்வில் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது "வெண் காசிபன் கொடுப்பித்த கல் கஞ்சணம்" எனப் படிக்கப்படுகிறது. அதாவது, "வெண் காசிபன் என்பவர் அமைத்துக் கொடுத்த கல் நீர்வடி என்று பொருள் கொள்ளப்படுகிறது.

## சீவலப்பேரி சுடலை

சுடலைமாடன் தமிழர்களின் காவல் தெய்வ மரபில் முக்கியமான தெய்வமாக வணங்கப்படுகிறார். தீய சக்திகளிலிருந்து மக்களை காக்கும் காவல் தெய்வம் என்ற நம்பிக்கை பரவலாக உள்ளது. சீவலப்பேரி தாமிரபரணி, சித்ரா மற்றும் கோதண்டராம நதிகள் சங்கமிக்கும் புனிதப் பகுதியில். அமைந்துள்ளது. இந்த இடம் "முக்கூடல்" என்றும் அழைக்கப்படுகிறது. தென்மாவட்டங்களில் உள்ள பல சுடலைமாடன் கோவில்கள், சீவலப்பேரியில் இருந்து பிடிமண் எடுத்துச் சென்று நிறுவப்பட்டதாக நம்பப்படுகிறது

## முப்பந்தல் இசக்கி

இசக்கியம்மன் தென் தமிழக நாட்டுப்புற மரபில் பெண்கள், குழந்தைகள் மற்றும் குடும்பங்களை காக்கும் சக்தி தெய்வமாக வழிபடப்படுகிறார். மக்கள் மரபுக் கதைகளில், அநீதிக்கு ஆளான ஒரு பெண் தெய்வமாக உயர்த்தப்பட்டவளே இசக்கி என்ற கருத்து பரவலாகக் காணப்படுகிறது. தமிழ்நாடு மற்றும் கேரளாவின் பல இசக்கி அம்மன் கோவில்களுக்கு முப்பந்தல் மூலஸ்தானமாகக் கருதப்படுகிறது.



வரலாற்றுடன் ஒரு நீர் காணல்
பொருநை

## பொருநை – வரலாற்றுடன் ஒரு நீர்காணல் – முழு விவரங்கள்:

ஜூலை – 4 &
5, 2026

AC சிற்றுந்து

5 வேளை தேநீர்
4 வேளை உணவு

வரலாற்று
ஆய்வாளர்

புறப்பாடு மற்றும் வருகை:
7 மணிக்கு
@திருநெல்வேலி

வசதியான AC
தங்குமிடம்

கட்டணம்: ₹6999
GST உட்பட

வரலாற்றுடன் ஒரு நீர் காணல்

பொருநை

+91 9384876772
+91 9487076772

www.aatrupadai.com

facebook/aatrupadai
instagram/aatrupadaitrz

முன்பதிவுக்கு

# ஆற்றுப்படை – பயண விதிமுறைகள் & நிபந்தனைகள்

## பதிவு மற்றும் கட்டணம்

- பயணத்தில் இடம் உறுதி செய்ய முழு கட்டணமோ அல்லது அறிவிக்கப்பட்ட முன்பணமோ செலுத்தப்பட வேண்டும்.
- கட்டணம் செலுத்திய பிறகே பதிவு உறுதி செய்யப்படும்.
- இடங்கள் வரம்புடையவை என்பதால், முதலில் பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## ரத்து (Cancellation)

- பயணத்திற்கு 10 நாட்களுக்கு முன் ரத்து செய்தால், செலுத்திய தொகையில் இருந்து நிர்வாகச் செலவுகள் கழித்து மீதித் தொகை திருப்பி வழங்கப்படும்.
- பயணத்திற்கு 5 முதல் 9 நாட்களுக்குள் ரத்து செய்தால், 50% தொகை மட்டும் திருப்பி வழங்கப்படும்.
- பயணத்திற்கு 5 நாட்களுக்குள் ரத்து செய்தால், எந்தவித தொகையும் திருப்பி வழங்கப்படாது.
- பயண நாளில் வராதவர்கள் (No Show) அல்லது கடைசி நேர ரத்து செய்தவர்கள் முழுக் கட்டணத்தையும் செலுத்தியதாகவே கருதப்படுவர்.
- தனிப்பட்ட காரணங்களால் பயணத்தில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலைகளுக்கு ஆற்றுப்படை பொறுப்பேற்காது.

## குழந்தைகள் தொடர்பான விதிமுறைகள்

- பயணத்தில் பங்கேற்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் முன்பதிவு அவசியம்.
- குழந்தைகளுக்கும் தங்குமிடம், போக்குவரத்து, உணவு, தேநீர், தண்ணீர் உள்ளிட்ட ஏற்பாடுகள் செய்யப்படுவதால், குழந்தைகளுக்கான கட்டணத்தில் தள்ளுபடி அல்லது ரத்து வழங்கப்படாது.
- முன்பதிவு செய்யப்படாத குழந்தைகளை பயண நாளில் அழைத்து வருவதைத் தவிர்க்கவும்.
- குழந்தைகளின் பாதுகாப்பு முழுமையாக பெற்றோர் / பாதுகாவலர்களின் பொறுப்பாகும்.

## பயண ஒழுங்குமுறைகள்

- பயண நேரத்தை அனைவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.
- தாமதமாக வருபவர்களுக்காக பயண அட்டவணை மாற்றப்படாது.
- குழுவின் ஒற்றுமை மற்றும் பயண அனுபவத்தை பாதிக்கும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது.
- வரலாற்றுத் தளங்கள், கோயில்கள் மற்றும் பொதுச் சொத்துக்களை மதித்து நடந்து கொள்ள வேண்டும்.
- பயணத்தில் கலந்து கொள்பவர்கள் தங்களுக்கு வேண்டியவற்றை அவர்களே கொண்டு வர வேண்டும்.
- பயணத்தில் ஏற்கனவே குறிப்பிட்ட தேநீர், உணவு மற்றும் குடிநீர் ஆகியவை மட்டுமே வழங்கப்படும். மேலும் தேவைப்படுவோர் அல்லது விருப்ப உணவு வேண்டுமெனில் அதற்கான கட்டணத்தை அவர்களே ஏற்க வேண்டும்.
- மரபு நடையில் மேற்கொள்ளும் பயணங்கள் வழக்கமான சுற்றுலாத் தளங்களுக்கு மாறான இடங்கள் என்பதால் கழிவறைகள் இருப்பது சற்று கடினம்; ஆகவே அதனை மனதில் கொள்ள வேண்டும்.

## உடல்நல அறிவிப்பு

- சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், இதய நோய் உள்ளிட்ட உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் தங்களின் மருந்துகளை கட்டாயம் எடுத்துவர வேண்டும்.
- தனிப்பட்ட உடல்நலக் காரணங்களால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஆற்றுப்படை நிர்வாகம் பொறுப்பேற்காது.
- அவசரநிலையில் முதல் உதவி மற்றும் மருத்துவ உதவிக்கான வழிகாட்டுதல் மட்டுமே வழங்கப்படும்.
- மருத்துவச் செலவுகள் மற்றும் சிகிச்சை தொடர்பான அனைத்து பொறுப்புகளும் பயணியையே சாரும்.

## பயண மாற்றம் / ரத்து

- வானிலை, இயற்கை சீற்றம், அரசாங்க உத்தரவு அல்லது தவிர்க்க முடியாத காரணங்களால் பயணம் மாற்றப்படவோ அல்லது ரத்து செய்யப்படவோலாம்.
- அத்தகைய சூழ்நிலைகளில் மாற்று தேதி அறிவிக்கப்படும் அல்லது நிர்வாகக் குழுவின் முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

*முக்கிய குறிப்பு*

*பயணத்திற்கான பேருந்து, உணவு, தங்குமிடம், அனுமதி, வழிகாட்டுதல் உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் முன்கூட்டியே பதிவு எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுகின்றன. எனவே கடைசி நேர ரத்து மற்றும் கட்டண விலக்கு கோரிக்கைகள் ஏற்கப்படமாட்டாது.*

*பயணத்தில் பங்கேற்பதன் மூலம் மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டதாக கருதப்படும்.*